**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கை தீர்ப்பாயம், ஆரணி,**
**திருவண்ணாமலை மாவட்டம்**

சார்பு நீதிமன்றம், ஆரணி,

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கை தீர்ப்பாயர், ஆரணி,

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை

**மோ.வா.வி.கோ.ம.எண்.110/2015**

CNR No.TNTM03000334/2015

ராஜேஸ்வரி, வயது 45, க/பெ. தஞ்சியப்பன், இந்து, வசிப்பது
நெ5/20, பட்டாங்குளம் கொல்லைமேடு, அத்திமலைபட்டு
அஞ்சல், ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ... மனுதாரர்

// எதிராக//

1. எஸ்.கார்த்திகேயன், த/பெ.செல்வம், வசிப்பது அண்ணா நகர், அத்திமலைப்பட்டு கிராமம், ஆரணி வட்டம்.
2. கே.செல்வம், த/பெ.கண்ணன், இந்து, வசிப்பது நெ.124, பிள்ளையார் கோவில் தெரு, அத்திமலைப்பட்டு கிராமம், ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.
3. மேலாளர், யுனைடட் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., அதன் அலுவலக முகவரி எண்.235, காந்தி மார்கெட் ரோடு, ஆரணி டவுன், திருவண்ணாமலை மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு 17.02.2026ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.திருஞானம்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மூர்த்தி, B.A.,BL., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிமனுதாரர்கள் நீதிமன்ற அறிவிப்பை பெற்றுக்கொண்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதுரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

14.02.2015ஆம் தேதி தஞ்சியம்மாள் என்பவர் சாலை விபத்தில் காயமடைந்து இறந்துவிட்டதற்காக ரூ.10,00,000/– இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

கடந்த 14.02.2015 அன்று மாலை சுமார் 5.15 மணியளவில் மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாள் என்பவர் நாராயணமங்கலத்தில் உள்ள உறவினரை பார்க்க சென்றுவிட்டு திரும்ப மனுதாரர் வீட்டிற்கு வருவதற்காக வேண்டி மேற்படி புதுப்பாளையம் கூட்ரோட்டில் பேருந்திலிருந்து இறங்கி பட்டாங்குளத்திற்கு வருவதற்காக வேண்டி ஆரணி டு வேலூர் பிரதான சாலையில் புதுப்பாளையம் கூட்ரோட்டில் அன்பு கடை எதிரில் மேற்படி ரோடின் இடதுபுற ஓரமாக மெதுவாக நடந்து வந்து கொண்டிருக்கும்போது, ஆரணியிலிருந்து வேலூர் நோக்கிச் சென்ற மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936–ன் ஓட்டுநர் மேற்படி வாகனத்தினை அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வலதுபுறமாக ஓட்டி வந்து நடந்து சென்று கொண்டிருந்த மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாள் மீது பலமாக மோதிவிட்டார். இதனால் தூக்கி எறியப்பட்ட தஞ்சியம்மாள் ரோடில் கீழே விழுந்துவிட்டார். இதனால் மேற்படி தஞ்சியம்மாளுக்கு தலையின் பின்புறம், இரண்டு கைகள், உடல் முழுவதும் பலத்த ரத்த காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.

2. மேற்படி விபத்து சம்பந்தமாக கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு கண்ணமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.29/2015, 279, 304(A) இ.த.ச. பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தற்போது மேற்படி வழக்கு ஆரணி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி விபத்தில் இறந்த தஞ்சியம்மாள் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.5,000/–க்கு மேல் வருமானம் ஈட்டி மனுதாரர் குடும்பத்திற்கு மிகவும் உதவிகரமாக இருந்து வந்தார். மேற்படி விபத்தில் இறந்துபோன தஞ்சியம்மாளுக்கு மனுதாரர் மட்டுமே ஓரே வாரிசு ஆவார். தற்போது தன் தாயாரை பிரிந்து மனுதாரர் மிகவும் கஷ்டத்திலும், வேதனையிலும் வாழ்ந்து வருகின்றார். மேற்படி தஞ்சியம்மாளின் இறப்பு மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பை ஏற்படுத்திவிட்டது. எனவே மேற்படி விபத்தில் திடிரென இறந்துபோன தஞ்சியம்மாளுக்கு இழப்பீடாக ரூ.10,00,000/–ம் கோரப்படுகிறது.

3. மேற்படி விபத்துக்கு மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936–ன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்ததால் மேற்படி விபத்து ஏற்பட்டது. விபத்து வாகனத்தின் ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரர், விபத்து வாகனத்தின் உரிமையாளர் 2–ம் எதிர்மனுதாரர் ஆவார். விபத்து வாகனமானது 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகன விபத்தில் இறந்துபோன மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாளுக்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தர கடமைப்பட்டவர் என்று மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

4. 3**ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

ரூ.10,00,000/– இழப்பீடு கேட்டு இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், சங்கதிப்படியும் ஏற்புடையதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிருபணம் செய்ய வேண்டும். மனுவின் 3 மற்றும் 4 பத்திகளில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையல்ல. விபத்து நடந்த விவரம், விபத்து நடந்த சங்கதி குறித்து கூறப்பட்டுள்ளவை குறித்து இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. அதை மனுதாரரே குறிப்பாக நிருபணம் செய்ய வேண்டும். மனுவின் 4 மற்றும் 6 பத்திகளில் சொல்லியுள்ள இறந்த நபரின் வேலை, வருமானம் ரூ.5,000/–ம் சம்பந்தமான விவரங்களை மனுதாரரே குறிப்பாக நிருபணம் செய்ய வேண்டும். மனுவின் 11–வது பத்தியில் விபத்து காரணமாக தஞ்சியம்மாள் இறந்து விட்டதாக கூறி இருப்பது உண்மை அல்ல. உரிய பாலிசி விவரம், ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் உரிமையாளர் விவரங்களை மனுதாரர் குறிப்பிடவில்லை. எனவே இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல. மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936–ன் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்ததாகவும், மாருதி ஆம்னி வேன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இயக்கப்பட்டதால் விபத்து ஏற்பட்டது என்பதை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை. இந்த எதிர்மனுதாரர் தேவையற்ற தரப்பினர் ஆவார். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதாக கூறியிருப்பதை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. இறந்த நபர் விவசாய வேலை செய்து ரூ.5,000/– மாத வருமானம் ஈட்டியதாக கூறி இருப்பதை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. இறந்த நபரின் வயது, வேலை, அவருடைய வருமானம் ஆகியவை குறித்து குறிப்பிட்டுள்ள விவரங்களை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. மனுதாரர் இறந்த நபரை சார்ந்து இருந்தார் என்பதும், மனுதாரர் இறந்த நபரின் வாரிசுதாரர் என்பதையும்

மனுதாரரே நிருபணம் செய்ய வேண்டும். இறந்த நபரும் விபத்து ஏற்படுவதற்கு ஒரு காரணமாக இருந்துள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் மனுதாரருடன் கூட்டாக சேர்ந்து செயல்படுவதாக தெரிய வந்தால், இந்த எதிர்மனுதாரர் மோட்டார் வாகன சட்ட பிரிவு 170(2)ன் கீழ் வழக்கை நடத்த அனுமதி வேண்டி மனு செய்ய உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார். எனவே, இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க அவசியம் இல்லை. மனுதாரர் 12 சதவீத ஆண்டு வட்டி பெற தகுதி இல்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் 6% சதவீத ஆண்டு வட்டியை வழங்கலாம். மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 147 மற்றும் 149–ன் கீழ் இந்த எதிர்மனுதாரருக்கு ஏற்படும் பாதுகாப்பை வழங்கவேண்டும் என்று எதிர்மனுதாரர் கோருகிறார். பிரிவு 149(2) மோட்டார் வாகனச் சட்டப்படி பாலிசி நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க பொறுப்பாளி அல்ல. இந்த மனுதாரர் வேறு எந்த மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயத்திலும் மனு தாக்கல் செய்யவில்லை என்பதை உறுதி கூறவேண்டும். அவ்வாறு வேறு மனு நிலுவையில் இருந்தால், அவை திரும்ப பெற வேண்டும். இந்த விபத்து சம்பந்தமாக ஒன்றுக்கும். மேற்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் எந்த உத்தரவு முதலில் பிறப்பிக்கப்படுகிறதோ, மனுதாரர் அதனை வைத்துக்கொண்டு, பின்னர் பிறப்பிக்கப்படும் உத்தரவின் இழப்பீடு தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதிகள் என்னவென்றால்,

1. விபத்து 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936 என்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா?

2. வழக்கின் மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? ஆம், எனில் அதை எந்த எதிர்மனுதாரர் செலுத்த கடமைபட்டவர்?

3. வழக்கில் மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?

6. மனுதாரர் தரப்பில், ம.சா.1, மனுதாரர் திருமதி.ராஜேஸ்வரி, ம.சா.2, திரு.தஞ்சியப்பன் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். 14.02.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, 08.04.2015 தேதியிட்ட தஞ்சியம்மாளின் இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.2, 11.07.1988 தேதியிட்ட விபத்து வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் ம.சா.ஆ.3, 17.07.2014 தேதியிட்ட விபத்து வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிஸி ம.சா.ஆ.4, 16.02.2015 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது.

7. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், எ.ம.சா.1 திரு.சிட்டிபாபு, நிர்வாக அதிகாரி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, வேலூர், எ.ம.சா.2 திரு.ராமமூர்த்தி, இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்துக்கழகம், ஆரணி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர், T.S.G–3936 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆம்னி வேன் காப்பீட்டின் உண்மை நகல் எ.ம.சா.ஆ.1, அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டது) எ.ம.சா.ஆ.2, 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்து அலுவலர், ஆரணி வழங்கிய அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.3, 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்து கழக அலுவலர் ஆரணி வழங்கிய கார்த்திகேயன் த/பெ. செல்வம் என்பவரது ஓட்டுநர் உரிமத்தின் விவரம் ஏதும் இவ்வலுவலகத்தில் வழங்கப்படவில்லை என்று வழங்கப்பட்ட கடிதம் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. **பிரச்சனை எண்.1:**

விபத்து 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936 என்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா?

கடந்த 14.02.2015 அன்று மாலை சுமார் 5.15 மணியளவில் மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாள் என்பவர் நாராயணமங்கலத்தில் உள்ள உறவினரை பார்க்க சென்றுவிட்டு திரும்ப மனுதாரர் வீட்டிற்கு வருவதற்காக வேண்டி மேற்படி புதுப்பாளையம் கூட்ரோட்டில் பேருந்திலிருந்து இறங்கி பட்டாங்குளத்திற்கு வருவதற்காக வேண்டி ஆரணி To வேலூர் பிரதான சாலையில் புதுப்பாளையம் கூட்ரோட்டில் அன்பு கடை எதிரில் மேற்படி ரோடின் இடதுபுற ஓரமாக மெதுவாக நடந்து வந்து கொண்டிருக்கும்போது, ஆரணியிலிருந்து வேலூர் நோக்கிச் சென்ற மாருதி ஆம்னி வேன் பதிவு எண்.T.S.G–3936–ன் ஓட்டுநர் மேற்படி வாகனத்தினை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வலதுபுறமாக ஓட்டி வந்து நடந்து சென்று கொண்டிருந்த மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாள் மீது பலமாக மோதிவிட்டார். இதனால் தூக்கி எறியப்பட்ட தஞ்சியம்மாள் ரோடில் கீழே விழுந்துவிட்டார். இதனால், மேற்படி தஞ்சியம்மாளுக்கு தலையின் பின்புறம், இரண்டு கைகள், உடல் முழுவதும் பலத்த ரத்த காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.

9. மேற்படி விபத்து சம்பந்தமாக கண்ணமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.29/2015, 279, 304(எ) இ.த.ச. பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது மேற்படி வழக்கு ஆரணி நீதித்துறை

நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் மனுவில் விவரம் கூறப்பட்டுள்ளது.

10. விபத்தை நேரில் பார்த்த சாட்சியாக மனுதாரர் தரப்பில், ம.சா.2 தஞ்சியப்பன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதன்மை சாட்சியத்தில், இறந்துபோன தஞ்சியம்மாள் தனது மாமியார் என்றும், அவர் கடந்த 14.02.2015 அன்று மாலை 5.00 மணியளவில் புதுப்பாளையம் கூட்ரோடிலிருந்து பட்டாங்குளம் வருவதற்காக ரேட்டின் இடதுபுற ஓரமாக எங்கள் ஊருக்கு வருவதற்காக அன்பு கடைக்கு எதிரில் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது ஆரணி பக்கம் இருந்து வந்த ப்ளூ கலர் மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வண்டியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாகிரதையாவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தஞ்சியம்மாள் மீது மோதிவிட்டார். அதை நான் பார்த்தேன் என்று தனது முதன்மை வாக்குமூலத்தில் விவரம் கூறியுள்ளார்.

11. விபத்து ஏற்படுத்திய மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மீது கண்ணமங்கலம் காவல் நிலையத்தில், குற்ற எண்.29/2015 பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் ஓட்டினார் என்பது ம.சா.ஆ.5 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு உரியது என்பதற்கான ஆவணமாக 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வாகன பதிவு சான்று ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு காரணம் 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்பது மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மாறாக விபத்து இறந்துபோன தஞ்சியம்மாள் என்பவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்று நிரூபணம் செய்யும் வகையில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தகுந்த சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இந்த விபத்து சம்பவம் 2–ம் எதிர்மனுதாரரின் மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனத்தை ஒட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று இந்த பிரச்சனை எண்.1ற்க்கு தீர்வு காணப்படுகிறது.

12. **<u>பிரச்சனை எண்.2:</u>**

வழக்கின் மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? ஆம், எனில் அதை எந்த எதிர்மனுதாரர் செலுத்த கடமைபட்டவர்?

விபத்தானது 2–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று பிரச்சனை எண்.1க்கு தீர்வு

காணப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டதில் இறந்துபோன தஞ்சியம்மாளுக்கு தலையின் பின்புறம், இரண்டு கைகள், உடல் முழுவதும் பலத்த ரத்த காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். தஞ்சியம்மாளின் இறப்பு சான்று ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் தாயார் தஞ்சியம்மாள் விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளார் என்பது தெரியவருகிறது. இறந்த தஞ்சியம்மாளுக்கு மனுதாரர் மட்டும் தான் வாரிசு என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையில் மனுதாரரின் கணவரான தஞ்சியப்பன் அளித்த புகார் விவரத்தில் தஞ்சியம்மாளுக்கு தனது மனைவி ராஜேஸ்வரி ஒரே மகள் என்றும், தஞ்சியம்மாள் தங்களுடன் வசித்து வந்ததாகவும் விவரம் கூறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தஞ்சியம்மாளின் மகள் என்ற முறையில் இழப்பீடு பெற உரிமை உள்ளவர் என்று தீர்ப்பாயம் கருதுகிறது.

13. விபத்து ஏற்படுத்திய மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் பெயரில் உள்ளது என்பதற்கு வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 2ம் எதிர்மனுதாரரின் மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனம் 3–ம் எதிர்மனுதார் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான காப்பீடு சான்று ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து ஏற்படுத்திய வாகனம் தங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதற்கான காப்பீடு சான்றை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த காப்பீடு சான்றை ஆராய்ந்து பார்க்கும் போது, 17.07.2014 முதல் 16.07.2015 வரை காப்பீடு உயிர்ப்புடன் உள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த வழக்கின் விபத்தானது 14.02.2015 ஆம் தேதி நடந்துள்ளது. விபத்து நடந்த சமயத்தில் 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3–ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

14. 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரர் கார்த்திகேயன் என்பவருக்கு விபத்து நடந்த தேதியில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது 3–ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதமாகும். மனுதாரர் தரப்பில் விபத்து நடந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆரணி, வட்டார போக்குவரத்து கழக அலுவலர் எ.ம.சா.2 ராமமூர்த்தி என்பவர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எ.ம.சா.2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.4 கடிதத்தின் படி விபத்து ஏற்படுத்திய

வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரர் எஸ்.கார்த்திகேயன் த/பெ. செல்வம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் எதுவும் வழுங்கப்படவில்லை என்ற விவரம் தெரியவருகிறது. உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாத 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியிருப்பதால் காப்பீடு விதிமுறை மீறப்பட்டுள்ளது. எனவே 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழுங்க அவசியம் இல்லை என்று 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5 ஆக மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையை ஆராய்ந்து பார்க்கும் போது, மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனத்தை ஓட்டிய கார்த்திகேயன் என்பவருக்கான ஓட்டுநர் உரிமம் ஆஜர்படுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை இயக்கிய கார்த்திகேயன் என்பவருக்கு விபத்து நடந்த சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிய வருகிறது.

15. 2–ம் எதிர்மனுதாரரின் மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பாலிசி எண். 0122013114P102666890 ஆகும். 2–ம் எதிர்மனுதாரரின் வாகனம், 3ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்தது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

**16. மாண்புமிகு உயர்நீதிமன்றம்** 2021 (1) TNMAC 385, National Insurance Company Ltd., Rep. by its Branch Manager, Tuticorin Versus Kombaiah & Others **என்கிற வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பில்** 11. Applying the aforesaid decisions to the facts of the case on hand, in view of the admitted fact that the accident had taken place on 14.11.2003, this Court is of the opinion that the Insurance Company is liable to pay compensation to the claimants at the first instance and thereafter recover the same from the insured. Accordingly, the finding of the Tribunal with respect to liability, is hereby modified **என கூறியுள்ளது. இவ்வழக்கில் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது. ஆதலால், மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக 3ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்திவிட்டு அதை இம்மனுவின் தொடர்ச்சியாக 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என்று மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.**

17. 2–ம் எதிர்மனுதாரரின் மாருதி ஆம்னி வேன் பதிவு எண். T.S.G–3936 என்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2–ம் எதிர்மனுதாரரின் வாகனம் காப்பீடு செய்யப்பட்டு இருப்பதால் மனுதாரருக்கு வழங்கக்கூடிய

இழப்பீடு தொகையை 3-ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்தி விட்டு அதை 2-ம் எதிர்மனுதாரிடமிருந்து பிறகு வசூல் செய்து கொள்ள வேண்டும் (Pay and Recovery) என்று பிரச்சனை எண்.2ற்க்கு இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**18. பிரச்சனை எண்.3ற்க்கான தீர்வு**

இறந்துபோன மனுதாரரின் தாயார் 65 வயது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். அதனை உறுதிபடுத்தும் விதமாக ம.சா.ஆ.2 ஆன தஞ்சியம்மாளின் இறப்பு சான்றில் அவரது வயது 65 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சியம்மாள் இறப்பு சமயத்தில் விவசாய வேலை செய்து மாதம் ரூ.5,000/-ம் வருமானம் ஈட்டியதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். இறந்துபோன தஞ்சியம்மாள் ரூ.5,000/-ம் வருமானம் ஈட்டினார் என்பதற்கு மனுதாரர் தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த தஞ்சியம்மாள் ரூ.5,000/-ம் மாத வருமானமாக ஈட்டியதாக கூறுவதை ஏற்கவில்லை என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன தஞ்சியம்மாள் 65 வயதுடைய நபர் ஆவார். அவர் 2015-ம் வருடத்தில் மாத வருமானமாக ரூ.5,000/-ம் ஈட்டுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. எனவே இறந்த தஞ்சியம்மாளின் மாத வருமானம் ரூ.5,000/-ம் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது.

19. இறந்து போன தஞ்சியம்மாள் 65 வயதுடைய நபர் என்பதால் அவருக்கு எதிர்கால வருமானம் கணக்கீடு செய்ய அவசியம் இல்லை என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2017(2) TNMAC609, National Insurance Company Limited versus Pranay Sethi and Others வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

20. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2009(2) TNMAC 1 (SC), Sarla Verma & Ors vs Delhi Transport Corp. & Anr என்கிற வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பில், இறந்து போன நபரின் வருமானத்திலிருந்து, இறந்துபோனவரின் தனிப்பட்ட செலவிற்கு அவரை சார்ந்துள்ள குடும்பத்தாரை கணக்கில் எடுத்துக்கொண்டு கழித்துக்கொள்ளவேண்டும் என கூறப்பட்டுள்ளது. இறந்துபோன நபர் திருமணம் ஆனவர் என்பதாலும் அவரை சார்ந்தவராக மனுதாரர் மட்டும் இருப்பதால், மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் இறந்தவரின் வருமானத்திலிருந்து 1/3 கழிக்க வேண்டும். இறந்த தஞ்சியம்மாள் மாத வருமானம் ரூ.5,000/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவரின் தனிப்பட்ட செலவினங்களை 1/3 ஆக கழிக்க வரும் தொகை ரூ.3334/- ஆகும். இறந்த தஞ்சியம்மாளின் மாத வருமானம் ரூ.3334/- ஆக கணக்கிடப்பட்டுள்ளது. அவருடைய ஆண்டு வருமானம் ( 3334 x12=40,008) ரூ.40,008 /- என்று கணக்கிடப்பட்டுள்ளது.

21. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2009(2) TNMAC 1 (SC), Sarla Verma & Ors vs Delhi Transport Corp. & Anr என்கிற வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பில், இறந்த நபரின் வயதை கணக்கில் கொண்டு அவரது வருமானத்தை கணக்கீடு செய்ய பெருக்கல் குறியீட்டு எண்ணை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் இறந்த நபரின் வயது 61 முதல் 65 வரை இருந்தால் பெருக்கல் குறியீட்டு எண்.7 எடுத்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்த தஞ்சியம்மாளின் வயது 65 என்பதால் இந்த வழக்கையும் பெருக்கல் குறியீட்டு எண் 7 எடுத்துக்கொள்ளப்படுகிறது. இறந்து போன தஞ்சியம்மாளின் ஆண்டு வருமானம் ரூ.40,008/- என்று கணக்கிடப்பட்டுள்ளது. இறந்த நபரின் வருமான இழப்பு (40,008x7=2,80,056) ரூ.2,80,056/- என்று கணக்கிடப்படுகிறது. மனுதாரருக்கு வருமான இழப்பீடாக ரூ.2,80,056/- கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்படுகிறது.

22. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2017(2) TNMAC609, National Insurance Company Limited versus Pranay Sethi and Others என்கிற வழக்கில், பிறப்பித்துள்ள தீர்ப்பின்படி Loss of Estate Rs.15,000/- and Funeral Expenses Rs.15,000/- என மனுதாரருக்கு ரூ.30,000/- இழப்பீடாக அளிக்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில், மனுதாரருக்கு தனது தாயாரை இழந்ததற்காக Loss of consortium என்ற தலைப்பில் மனுதாரருக்கு ரூ.40,000/- இழப்பீடாக அளிக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.

| வ.எண். | தலைப்பு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | Loss of Income | ரூ. 2,80,056 /- |
| 2. | Loss of consortium | ரூ. 40,000/- |
| 3. | Funeral Expenses | ரூ. 15,000/- |
| 4. | Loss of Estate | ரூ. 15,000/- |

மொத்தம் ரூ.3,50,056/-

எனவே மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.3,50,056/- கிடைக்க கூடியது என தீர்மானித்து பிரச்சனை எண்-3க்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,** இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.3,50,056/- கிடைக்கத்தக்கது என்றும் மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த 23.04.2015 தேதியில் இருந்து பணம் செலுத்தும் தேதி வரை

அதற்கு வட்டியாக 7.5% செலுத்த வேண்டும் என்றும் அதை 2ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்து கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இழப்பீட்டுத்தொகையை 3ம் எதிர்மனுதாரர் உத்தரவு தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் சார்பு நீதிபதி ஆரணி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கணக்கு எண்.42880263475 என்ற கணக்கில் செலுத்த வேண்டும். இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர் வைப்பீடு செய்த விவரத்தை இந்நீதிமன்றத்திற்கும் மனுதாரர் வழக்கறிஞருக்கும் தெரியப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

4. வழக்கு தவறுகைக்காக தள்ளுபடியாகியிருந்தால் அந்த காலகட்டத்திற்கு வட்டி கிடையாது என உத்தரவிடப்படுகிறது.

5. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்பட்ட பிறகு மனுதாரர்கள் மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ளலாம் என்றும், அத்தொகை மனுதாரர் வங்கிக் கணக்கிற்கு NEFT (or) RTGS முறையில் மாற்றம் செய்யப்படும்.

6பாக்கி நீதிமன்ற கட்டணத்தை மனுதாரர் செலுத்தவில்லை என்றால் தீர்ப்பாணை தொகையை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

7. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,001/- என்று நிர்ணயிக்கப்படுகிறது.

8. 3ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மனு செலவுத்தொகையாக ரூ.2.878/- செலுத்த வேண்டும். (செலவுப்பட்டியல் தாக்கல் இல்லை. நுழைவு கட்டணம் மட்டும்)

<u>வங்கி விவரம்</u>

மனுதாரர் தரப்பில் வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கு விசாரணையின் பொழுதும் மனுதாரர் வங்கி கணக்கு குறித்த விவரங்களை தாக்கல் செய்யவில்லை.

<u>தேவையான இதர விவரங்கள்</u>

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | - | 23.04.2015 |
| மனு உத்தரவு தேதி | - | 05.03.2026 |
| கோரிய தொகை | - | ரூ.10,00,000/- |
| தீர்ப்பாயம் அளித்த தொகை | - | ரூ. 3,50,056/- |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | - | ரூ.500/- |
| பாக்கி செலுத்தப்பட வேண்டிய நீதிமன்ற கட்டணம் | - | ரூ. 2,373/- |

| வ.எண். | விவரங்கள் | தொகை (ரூபாயில்) | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | நீதிமன்ற கட்டணம் | 2,873.00 | – |
| 2. | வக்காலத்து நாமா | 5.00 | 5.00 |
| 3. | புரோசஸ் கட்டணம் | – | – |
| 4. | வழக்கறிஞர் கட்டணம் (கோரியவாறு) | – | 10000.00 |
| 5. | மனு தயாரிக்க | – | 100.00 |
| 6. | மொத்தம் | 2.878.00 | 10,105.00 |

Cost list not filed by the petitioner. (3 rd Respondent Claimed for cost Rs.10,105/-)

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2026.03.05 17:34:49 +0530

மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாயர்,

சார்பு நீதிபதி, ஆரணி.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2026.03.05 17:34:57 +0530

மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாயர்,

சார்பு நீதிபதி, ஆரணி.

**<u>இணைப்பு:</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – திருமதி.ராஜேஸ்வரி, ( மனுதாரர்)

ம.சா.2 – திரு.தஞ்சியப்பன்,

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 – 14.02.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை.

ம.சா.ஆ.2 – 08.04.2015 தேதியிட்ட தஞ்சியம்மாளின் இறப்பு சான்று நகல்.

ம.சா.ஆ.3 – 11.07.1988 தேதியிட்ட விபத்து வாகனத்தின் ஆர்.சி.புத்தகம்.

ம.சா.ஆ.4– 17.07.2014 தேதியிட்ட விபத்து வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிஸி.

ம.சா.ஆ.5– 16.02.2015 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–</u>**

எ.ம.சா.1 திரு.சிட்டிபாபு, நிர்வாக அதிகாரி,
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, வேலூர்

எ.ம.சா.2 திரு.ராமமூர்த்தி, இளநிலை உதவியாளர்,
வட்டார போக்குவரத்துக்கழகம், ஆரணி.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

எ.ம.சா.ஆ.1 T.S.G–3936 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஆம்னி வேன் காப்பீட்டின் உண்மை நகல்

எ.ம.சா.ஆ.2 அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டது).

எ.ம.சா.ஆ.3 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்து அலுவலர், ஆரணி வழங்கிய அனுமதி கடிதம்.

எ.ம.சா.ஆ.4 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்து கழக அலுவலர் ஆரணி வழங்கிய கார்த்திகேயன் த/பெ. செல்வம் என்பவரது ஓட்டுநர் உரிமத்தின் விவரம் ஏதும் இவ்வலுவலகத்தில் வழங்கப்படவில்லை என்று வழங்கப்பட்ட கடிதம்.

Note:- All necessary particulars are incorporated in the award as per the order of Hon'ble Madras High Court in CMP Nos. 264 to 281 of 2020 Dt. 11.05.2020. Decretal Order will not be prepared separately.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.05 17:35:08 +0530

மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாயர்,
சார்பு நீதிபதி, ஆரணி.